யாழ் இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்

ஊடக அறிக்கை

சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினரால் நடாத்தப்பட்டு வருகின்ற முதியோர் இல்லத்தின் 12வது ஆண்டு நிறைவை முன்னிட்டு சரவணப் பொய்கை கட்டிடத் திறப்பு விழா இன்று (06.டிசம்பர் 2019) தொல்புரம் சுழிபுரத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ் இந்தியத் துணைத்தூதுவரின் சார்பாக சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தூதரக உயர் அதிகாரி திரு நிரஞ்சன் அவர்கள் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினரால் நாவற்குழியில் அமைக்கப்பட்டு வரும் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்துவதற்கென இலங்கை ரூபாய் 200,000ற்கும் அதிகமான பெறுமதியுடைய வீணை, வயலின், ஹார்மோனியம், மிருதங்கம், புல்லாங்குழல் ஆகிய இசைக்கருவிகளை சிவபூமி அறக்கட்டளை நிறுவுனர் முனைவர் ஆறுதிருமுருகனிடம் கையளித்தார். ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் இவ் கட்டிட திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்வுடன் தொடர்புடைய புகைப்படங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

***

*06 டிசம்பர், 2019.*